15 MAR 2000
மாநகராட்சி
யாழ்ப்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 02 புதன்கிழமை ( 15 - 03 - 2000 ) VALAMPURI ஒலி: 87

★ செம்மணிப்புதைகுழி வழக்கு; பலத்த பாதுகாப்பு மத்தியில்

# 4இராணுவ அதிகாரிகள் ஒருபொலிஸ்

# நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்!

## அடுத்த விசாரணை 28ஆம் திகதிக்கு

(எமது அலுவலகச் செய்தியாளர்)

செம்மணிப் பிரதேசத்திலுள்ள புதை குழிகளிலிருந்து மனித எலும்புக் கூடுகள் அகழ்ந்து எடுககப்பட்டமை தொடர்பாக நான்கு அதிகாரிகளும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளுமாக ஐந்துசந்தேக நபர்கள் நேற்று யாழ்-நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி யாழ்-மத்திய கல்லூரியில் நடை பெற்ற நீதிமன்ற அமர்வில் யாழ்-மாவட்ட மேலதிக நீதிவான் எம்-இளஞ்செழியன் பிறப்பித்த உத்தரவை அடுத்து இவர்களை இரகசியப் பொலிஸார் கைது செய்தனர்.

செம்மணிப் புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இராணுவ அதிகாரிகளான கப்டன் ஹேவகே ஜெயசிங்க லலித் துசிதகுமார, கப்டன் யட்ட கமகே அத்துலத்உதயகுமார பி.ஏ. சமரவிக்கிரம, கப்டன் விஜிதகமகே டில்சான் சசித பெரேரா, லெப்ரினன்ட் சசேந்திர விஜய சிறிவர்த்தனா ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

ஏனைய சந்தேக நபர்களான லெப்ரினன்ட் துடு

( 8ஆம் பக்கம் பார்க்க)

## கொலைச் சந்தேகநபர்கள் அரசின் பாராட்டு,பதக்கம் பெற்றவர்கள்

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கில் சம்பந்தப்பட்டவர்களெனக் கருதப்படும் 2வது 4வது 5வது சந்தேகநபர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான மோதல்களில் தீவிரமாக செயற்பட்டவர்களென அரசினால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு அரசாங்கம் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்ததுடன் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளினால் பாராட்டப் பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது,

இதனால் இவர்களை விளக்க மறியலில் வைக்காமல் இராணுவப் பொலிஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## முச்சக்கரவண்டியில் கொண்டு வரப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கில் முதலாவது சந்தேகநபரான கப்டன் ஹேவகே ஜெயசிங்க லலித் துசிதகுமார என்பவர் வலது கால் இழந்த நிலையில் முச்சக்கர வண்டியில் வைத்து நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டார்.

## ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

கடந்த9ஆம் திகதி உமையாள் புரத்தில் ஏற்பட்ட மோதலில் மேஜர் இளங்கேசவன்(கிருஸ்னசாமி வசீகரன்) யாழ்ப்பாணம். என்ற போராளி உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர். (ச)

எமது உறவுகளைக் காணாமல்

## 38மாதங்களாக தவிக்கும் எமக்கு எந்தச்சட்டம் துணைவரப்போகிறது

(யாழ்ப்பாணம்)

குற்றம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. சாதாரணமாக ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டால் அவரை 24 மணித்தியாலங்களுக்குள் நீதி மன்றத்தில் ஆஜர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## எமதுபிள்ளைகளையும் கணவர்களையும் கொன்றுபுதைத்த பாவிகளே

### உறவினர்கள் அழுது புலம்பல்

எமது பிள்ளைகளின் வாழ்வை புதைகுழியில் மண் தூவிப் புதைத்த பாவிகளே, எம்மிடமிருந்து எமது இளம் கணவன்மாரைப் பறித்தெடுத்த கொலைஞர்களே, என்று கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக கொண்டுவரப்பட்ட படையினரை நோக்கி மேற்கண்ட வாசகங்களினால் அங்கு கூடியிருந்த இளம் விதவைகளும் பிள்ளைகளைப்

( 8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் போட்டியிடுவதற்கு விடுதலைப் புலிகளுக்குத் தடையில்லை

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

[கொழும்பு]

தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு இன்று வரை அரசாங்கத்தினால் தடைசெய்யப்படவில்லை. அவர்கள் விரும்பினால் தேர்தலில் போட்டி இடலாம் இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநா

[8 ஆம்பக்கம் பார்க்க]

## பிஸ்டல் குழு கைவரிசை ஒருவர் கொல்லப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசடியில் வைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் பிஸ்டல் குழுவினரின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

கணபதிப்பிள்ளை நந்தகுமார் என அடையாளம் காணப்பட்ட இவர் 1993 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகி

[8ஆம் பக்கம் பார்க்க]

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது

# புலிகள் ஆயுதங்களைப் போடவேண்டியதில்லை

# வட-கிழக்கிலிருந்து படை வாபஸ் இல்லை!

### வெளிநாட்டு பத்திரிகையாளர் மத்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

சமாதானத் தீர்வு தொடர்பாக விடுதலைப்புலிகள் அரசுடன் பேச்சு நடத்த முன் வரும் போது ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என நாம் நிபந்தனை விதிக்க மாட்டோம்.

நேற்று வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;வடக்குக் கிழக்கிலிருந்து இராணுவத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிபந்தனையை அரசினால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசு பேச்சு வார்த்தைக்கு நிபந்தனை எதனையும் விதிக்கா விடினும் பேச்சுக்கு ஒரு கால வரம்பு தேவை என்பதில் உறுதியாக உள்ளது.

அரசும் ஐ. தே. கட்சியும் விடுதலைப்புலிகளும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுமியைக் காணவில்லை

யாழ் போதனா வைத்திய சாலையில் தங்கியிருக்கும் நோயாளி ஒருவருக்கு உதவிக்கு வந்த சிறுமி ஒருவர் நேற்றுக்காணாமல் போய் விட்டதாக யாழ் போதனா வைத்தியசாலைப் பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.

நாகர் கோவில் வடக்கைச் சேர்ந்த சுதர்சினி செல்வரெட்ணம் (வயது13) என்ற சிறுமியே காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது. (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த(B.Sc - Computer) நிரந்தர வதிவிட விசா பெற்று கனடாவில் வேலை பார்க்கும் பாவம் குறைந்த 31 வயது மிருகசீரிட 1 பாதமுடைய மணமகனுக்கு பட்டதாரி Cima, கணனி படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். இங்கு வந்துமணம்முடித்து ஸ்பொன்சரில் அழைக்கலாம். தொடர்பு C/o,வலம்புரி,15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். (கி/126)

### திருத்துதல்

பியானோ (PIANO) உட்பட எல்லா வாத்தியக் கருவிகளும் திருத்துபவர்கள். பியானோ உட்பட எல்லா வாத்தியக் கருவிகளும் வாங்கி விற்பவர்கள். சகோ T. சணேசன் 261/7, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தியாகராஜா படிப்பகம் முன்பாக மகப்பேற்று நிலையம் அருகாமை. (234)

## இன்று பிரிவுபசார விழா

[புலோலி]

வடமராட்சி வலய பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். சேதுராஜா கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக கல்வியியல்துறை உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் புதிய பதவியை வதிர் வரும் 1-ஆம் திகதி பொறுப்பேற்கின்றார்,

வடமராட்சி கல்வி அபிவிருத்திக் கழகத்தின் செயலாளராகவும் கடமையாற்றி வந்த இவரது சேவையைப் பாராட்டி வடமராட்சி கல்வி அபிவிருத்திக்கழகத் தலைவர் திரு. எஸ். விக்கினேஸ்வரன் தலைமையில் பிரிவுபசார பாராட்டு விழாவொன்றை இன்றுபுதன்கிழமை 15ம்திகதி நடாத்துகின்றது (க-52)


# கல்யாணி கிறீம் ஹவுஸ்

73,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கோடை காலத்தில் குளிர்பெற

## ஐஸ்கிறீம் வகைகள்

★ சொக்லட் கிறிப்ஸ்
கல்யாணிஸ்பெஷல் ஐஸ்கிறீம்
★ புருட்சலட் ஐஸ்கிறீம்
★ வனிலா ஐஸ்கிறீம்
★ சொக்லட் ஐஸ்கிறீம்
★ ஜெலி ஐஸ்கிறீம்
★ நட்ஸ் ஐஸ்கிறீம்மற்றும்

மட்டன் றோல், கட்லட், பற்றிஸ், கேக், மஸ்கட், பீடா மற்றும் குளிர்பான வகைகள்

யாவற்றையும் சுவைத்து மகிழ நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

KALYANI CREAM HOUSE

73,KASTHURIYAR ROAD, JAFFNA.

(கி- 127)


# யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனம் 11 நிரந்தர விரிவுரையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு பதினொரு நிரந்தர விரிவுரையாளர்கள் கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விபரம் வருமாறு: ரி. இராமஜெயம் கணிதமும் புள்ளி விவரவியலும் செல்வி எஸ். இராயுமேஸ் - முகாமைத்துவம் திருமதி ஏ. வசந்தினி தகவல் தொழில்நுட்பம் செல்வி எஸ். இராஜரட்ணம் -வர்த்தகம், ரி. தவேந்திரன்-பொருளியல், எஸ். விஜயநாதன்-பொருளியல், எஸ். கே, கண்ணதாஸ்-ஆங்கிலம், வி. தனேஸ்வரன்-தகவல் தொழில்நுட்பம், ஏ. தேவராஜா-ஆங்கிலம், வி. சிவகுமார்-தகவல் தொழில்நுட்பம்.

இது இவ்வாறிருக்க மேற்படி நிரந்தர நியமனம் தொடர்பாக தமது கோரிக்கைக்கு மதிப்பளித்து விரைவான நடவடிக்கை மேற்கொண்டு தமது நிறுவனத்திற்கு பேருதவி புரிந்ததற்கு தமது நன்றியறிதலைத் தெரிவிப்பதாக மேற்படி நிறுவன மாணவர் ஒன்றியம் யாழ். எம். பியும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பொதுச் செயலருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## டக்ளஸ் எம். பிக்கு மாணவர் ஒன்றியம்நன்றி தெரிவிப்பு

இக்கடிதத்தில் நன்றிக்குரியவர்களில் கே. வி. குகேந்திரன் (ஜெகன்) எம். பி. ஆகியோரும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர்.

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 14 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

| | |
|---|---|
| 136787 ஏ | 136788 ஏ |
| 136788 பி | 138252 பி |
| 139432 ஏ | 139432 பி |
| 139438 ஏ | 139438 பி |
| 139441 ஏ | 139442 ஏ |
| 139446 ஏ | 139446 பி |
| 139470 ஏ | |

சாவகச்சேரி

| | |
|---|---|
| 136118 ஏ | 136121 ஏ |

கோப்பாய்

| | |
|---|---|
| 134198 ஏ | 135996 ஏ |
| 135996 பி | 135996 சி |
| 136125 ஏ | 136192 ஏ |
| 136225 ஏ | 136225 பி |
| 136471 ஏ | 136473 ஏ |
| 136473 பி | 136502 ஏ |
| 136504 ஏ | 136504 பி |
| 136504 சி | 136504 டி |
| 136504 ஈ | 136773 ஏ |
| 136779 ஏ | 136779 பி |

நல்லூர்

| | |
|---|---|
| 125347 ஏ | 128352 ஏ |
| 128352 பி | 128352 சி |
| 128352 டி | 136064 ஏ |
| 136065 ஏ | 136071 ஏ |
| 136073 ஏ | 136095 ஏ |
| 136126 ஏ | 136184 ஏ |
| 136789 ஏ | 136789 பி |
| 138252 ஏ | 139440 ஏ |
| 139440 பி | 139451 ஏ |
| 139451 பி | 139461 ஏ |
| 139461 பி | 139461 சி |
| 13986 ஏ | |

## சதாவதானி குருபூசை தின போட்டிகளுக்கு ஏற்பாடு

(புலோலி)

மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 93 வது குருபூசை தினத்தையொட்டி குருபூசை தினப் போட்டிகள் நடாத்தப்பட உள்ளன.

பாலர் பிரிவு, பாலர்மேற் பிரிவு, தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5, தரம் 6, தரம் 7 மத்திய பிரிவு, மேற்பிரிவு, உயர்பிரிவு எனப் போட்டிகள் நடாத்தப்பட வுள்ளன.

போட்டிகளில் மனனம் பேச்சு, பண்ணிசை. அவதானப் போட்டி, பொது அறிவுப் போட்டி என்பன ஏப்ரல் மாதம் 8-ம் 9-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

நிறைவு தின விழாவின் போது இப் போட்டிகளில் வெற்றியீட்டப் படுபவர்களுக்கான பரிசில்கள். சான்றிதழ்கள் பிரதம விருந்தினரால் வழங்கப்படுமென நிலையச் செயலாளர் திரு. கே. தங்கராஜா அறிவித்துள்ளார். [52]

## இன்று கருத்தரங்கு

(மந்துவில்)

பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் சித்த மருத்துவ கருத்தரங்கு இன்று புதன் கிழமைபிற்பகல் 2 மணியளவில் கலாசாலை சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சித்த மருத்துவத்தில் உணவுபற்றிய எண்ணக்கரு'' பற்றி கலாநிதி. திருமதி பஞ்சுராஜா [விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக் கழகம்] கருத்து வழங்கவுள்ளார். (க-39)

## ஓய்வுபெறும் அதிபர்

(அச்சுவேலி)

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை அதிபர் சி. தங்கவேல் எதிர் வரும் 22 ஆம் திகதியிலிருந்து தனது பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

இவர் ஓய்வுபெறுவதை அடுத்து புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்படும் வரை தற்போது உப அதிபராகக் கடமையாற்றி வரும் திருமதி இராசலிங்கம் அதிபராக பதில் கடமையாற்றுவார். (14)

## ஐதரசன் பேரொட்சைட் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நோயாளிகளின் காயங்களை மிகவும் சிறந்தமுறையில் சுத்தப்படுத்தும் ஐதரசன் பேரொட்சைட் என்னும் திரவத்திற்கு நீண்டகாலமாகத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இத்திரவமானது காயங்களிலுள்ள அழுக்குகளை மிகவும் சிறந்த முறையில் அகற்றுவதால் நோயாளர்கள் நல்லபலனை பெற முடியும் ஆனால் இத்திரவத்திற்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதனால் வைத்தியர்களும் ஊழியர்களும் சத்திரசிகிச்சை தொடர்பான வேலைகளை செய்வதில் மிகுந்த இடையூறுகளுக்கு உள்ளாகிறார்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (105)

## நெடுந்தீவுப் பிரதேசத்தில் படகுச் சேவை சீரின்மையால் பயணிகள் பெரிதும் அவலம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச போக்கு வரத்துக்கான படகுச் சேவை சீரின்மையால் பொதுமக்கள் பெரிதும் சிரமமடைவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

குமுதினிப் படகுச் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதிலிருந்து, படகுச் சேவையில் ஈடுபடும் தனியாரும் கூட்டுறவுச் சங்கமும் ஏனோ தானோ என்ற நிலையில் சேவையிலீடுபடுகின்றது.

அதேவேளை ஐம்பது பயணிகள் மட்டுமே பிரயாணம் செய்வதற்குரிய படகுகளில் 7 ற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களும் 500 கி. கிராமிற்கு மேற்பட்ட மீனையும் பயணிகளுடன் சேர்த்து ஏற்றிச் செல்வதனால் கடல் கொந்தளிக்கும் அலைகளுக்கு மத்தியில் நிம்மதியற்ற ஏக்க நிலையிலே பிரயாணம் செய்ய வேண்டியுள்ளதால் உயிரை கையில் பிடித்துக் கொண்டு ஏக்கத்தின் மத்தியில் பயணிக்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 11 ஆம் திகதி பிரயாணத்தின் போது மீன் பெட்டி சிறுமி ஒருத்தி மீது விழுந்ததனால் சிறிய காயங்களுக்குள்ளாகியும் நிலைமை திருந்தவில்லை எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (க-82)

## பாஸ் வழங்கும் நடைமுறை மட்டு. மாவட்டத்தில் அமுலாக்கும் நடவடிக்கைகள் துரிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பாஸ் வழங்கும் நடைமுறையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் தரத்திலான பொலிஸார் சில விஷேட பயிற்சிக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசடி மாநகரசபை கட்டிடத்தில் பாஸ் வழங்கும் அலுவலகம் இயங்கவுள்ளது. பாஸ் வழங்கலுக்கான மும்மொழிகளிலும் அடங்கும் படிவங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

வர்த்தமானியில் இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவித்தல் வெளியானதும் பாஸ் முறை அமுலுக்கு வருமெனத் தெரிவிக்கப் படுகின்றது. (எஸ்-60)

## (இராசி பலன்)

15.03.2000
புதன்கிழமை
(தமிழுக்கு பங்குனி - 02)

தசமி இரவு 7.19 வரை, புனர்பூசம் இரவு 10.23 வரை சித்தயோகம், இராகுகாலம் பகல் 12.51 முதல் 2.21 வரை, சுபநேரம் மாலை 5.20 முதல் 6.50 வரை, சித்தயோகம்.

**மேடம்:** நண்பர் கலகலப்பு, புதிய முயற்சி, பணவரவு.

**இடபம்:** மரியாதைக்குறைவு, அபவாதம், தெய்வநம்பிக்கை.

**மிதுனம்:** பிடிவாதம், வாக்குவன்மை தாய்வழிநன்மை.

**கடகம்:** பழிச்சொல், தொழில் குறைவு, பங்காளர்தொல்லை

**சிங்கம்:** தான தர்மம், உறவினர் அறிவுரை, சிந்தனை.

**கன்னி:** தொழில்லாபம், கடன் வரவு, நியாயம் கற்பித்தல்.

**துலாம்:** ஆவேச உணர்வு' குடும்ப பகைமை, மாமியார் கவலை.

**விருச்சிகம்:** வேண்டாத தொல்லை, அலைச்சல், புத்திரர் கவலை

**தனுசு:** தியாகசிந்தை, சயனசுகக் குறைவு, ஏமாற்றம்.

**மகரம்:** காரியசித்தி, புதியபதவி, உபசாரம்.

**கும்பம்:** எதிரிகள் துன்பம், பண முடை, காதல்தோல்வி.

**மீனம்:** முட்டிமோதல். வீண்பயம், தொழில் கஸ்டம்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

# குப்பிவிளக்கு சரிந்துவீழ்ந்ததில் குழந்தை காயத்துடன் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

எரிந்துகொ 'டிருந்த குப்பிவிளக்கு தவறுதலாக குழந்தைமீது சரிந்து விழுந்ததில் படுகாயமடைந்த குழந்தை சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குஎடுத்துச் செல்லப்பட்டது. ஏழுமாதங்கள் நிரம்பிய க, நியூட் என்பவரே காயமடைந்த குழந்தையாகும்.

(க-105)

## கர. பிரதேச இளைஞர் கழக

# புத்தாயிரமாம் ஆண்டிற்கான இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது

[மந்திகை]

கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான புத்தாயிரமாம் ஆண்டிற்கான விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டி இன்று புதன்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாகச் சம்மேளன அதிகாரி. தபேந்திரன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள போட்டிகளில் பங்குபற்றும் அணிகளும் வருமாறு.

### துடுப்பாட்டம்

★ கரணவாய் தெற்கு இளைஞர் கழகம் எதிர் அல்வாய் தெற்கு இளைஞர் கழகம்.

### வலைப்பந்தாட்டம்

★ கரவெட்டி கிழக்கு இளைஞர் கழகம் எதிர் அல்வாய் தெற்கு இளைஞர் கழகம்.

### உதை பந்தாட்டம்

★ அல்வாய் இளைஞர் கழகம் எதிர் அல்வாய் தெற்கு இளைஞர். கழகம்.

(செ-23)

## வடமராட்சி வலய

# பாடசாலைகளுக்கிடையிலான வலை,கரப்பந்தாட்டப் போட்டிகள்

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று பி. ப. 1.30 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு.

கரப்பந்தாட்டம்

**17 வயதுப் பிரிவு**

★ ஹாட்லிக் கல்லூரி எதிர் இமையாணன் அ. த. க. பாடசாலை

**19 வயதுப் பிரிவு**

★ ஹாட்லிக் கல்லூரி எதிர் கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரி

வலைப்பந்தாட்டம்

**15 வயதுப் பிரிவு**

★ மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி எதிர் வடமராட்சி இந்துமகளிர்கல்லூரி

**17 வயதுப் பிரிவு**

★ வடமராட்சி இந்து மகளிர்கல்லூரி எதிர் மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி

**19 வயதுப் பிரிவு**

★ வடமராட்சிப் இந்து மகளிர் கல்லூரி எதிர் மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி;

கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தலைமையில் நடைபெறும்இந்நிகழ்விற்கு வடக்கு -கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி பிரதமவிருந்தினராகக்கலந்து கொள்கிறார்.

(செ-23)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

[அச்சுவேலி]

யா/அச்சுவேலி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி. ப, 1,30 மணிக்கு மைதானத்தில் நடைபெறவுள்ளது,

அதிபர் ச. கனகராசா தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு யாழ்ப்பாண கல்வித் திணைக்களப் பொறியியலாளர் கு. சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(செ-57)

★ ★ ★

(இணுவில்)

யா/ உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிஇன்று புதன்கிழமை பி. ப. 1. 45 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் பொ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்,

(செ-49)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ)

# யோகர் சுவாமிகள் திருவடி பூசை



சிறு உத்தியோகம் இருக்கும் போது பெரும் உத்தியோகத்திற்கு ஆசை. பெரும் உத்தியோகம் வந்ததும், பெரும் சம்பளத்திற்கு ஆசை. பெருஞ் சம்பளம் வந்தால் பிள்ளைகள் நல்லாய் வாழவேண்டுமென்ற ஆசை. இவ்வாசைகளுக்கு எல்லைதான் உண்டோ?

காசை அதிகமாக வைத்திருந்து என்ன செய்யப்போகிறீர்கள்? சீவியத்தைஒரு நாளாவது கூட்ட முடியுமோ? உள்ள பொழுது தானதர்மக் கருமங்களைச்செய்யுங்கள்

அவனைப் போலவே நீயும் ஒன்றையும் நினையாமலிரு.

கூடாதவனென்று நீ நினைக்கிறவனிடத்திலும் மகாத்மாகாந்தியிடத்திலுமில்லாத சில நற்குணங்களிருக்கும்.

யோகர் சுவாமிகள் திருவடி பூசை இரண்டாவது நாளாக இன்று சிவதொண்டன் நிலையத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.

# வடமத்திய மாகாண முதல்வர் வீதி விபத்தில் பலியானார்

(கொழும்பு)

வடமத்தியமாகாண சபையின் முதல்வரும் அங்கத்தவருமான அருணதேசப்பிரிய அதிகாரி நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் பலியானார்.

தனது வீடுநோக்கி ஜீப்பில் சென்று கொண்டிருந்த சமயம், ஜீப் வீதியில்இருந்து விலகி விபத்துக்குள்ளாகியதில் இவர் பலியானதாக கூறப்படுகிறது.

(க-9)

## வியாழன் பாபநாசம் சிவன்பற்றியது

# வானொலியில் வாக்கேயகாரர் வார இசைநிகழ்ச்சிக்குஏற்பாடு

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தேசிய சேவையில் தினமும் இரவு 10.15 மணிக்கு வாக்கேய காரர் வாரம் இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமான இந்நிகழ்ச்சியில் எதிர்வரும் வியாழக்கிழமை பெரும் புகழாளர் பாபநாசம் சிவன் பற்றிய நிகழ்ச்சி ஒலிபரப்பாகவுள்ளது.

''கர்நாடக சங்கீதத்திற்கு உரமூட்டி வளம் சேர்த்து உன்னத நிலைக்கு இட்டுச் சென்றவர்கள் வாக்கேயகாரர்கள் என அழைக்கப்படும் இசை விற்பன்னர்கள் இந்த வகையில் தான இவ்வாக்கேயகாரரின் பாடல்களைக் கேட்டு மகிழும்வண்ணம் இந்த இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்று தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் தெரிவித்திருக்கிறார்.

(எஸ்)

# பற்றறி கற்பூரம் தீப்பெட்டி வேலணைக்கான தடை நீக்கம்

(வேலணை)

வேலணைப் பகுதிக்கு பற்றறி கற்பூரம் தீப்பெட்டி என்பன எடுத்துச் செல்வதற்கு இதுவரை காலமும் இருந்து வந்த தடை அண்மையில் நீக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் திரு.ந. கருணாகரகுருமூர்த்திக்கும் வேலணைப் பகுதி கடற்படை அதிகாரிக்கும் இடையே இடம் பெற்ற சந்திப்பின் போது மேற்படி பொருட்களுக்கான தடை பற்றியும் இதனால் மக்கள் எதிர்நோக்கும் கஸ்டங்கள் பற்றியும் பிரதேசச்சபைத் தலைவர் எடுத்துக்கூறியதை ஏற்றுக்கொண்ட கடற்படை அதிகாரி தடையை நீக்குவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து மேற்படி பொருட்கள் வேலணைப் பகுதிக்கு எடுத்துச் செல்ல தற்போது அனுமதிக்கப்படுகிறது.

(எஸ்)

# சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சமுர்த்தி ஊக்கிவிப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் கல்வித் தகமை அடிப்படையில் தரம்2' தரம்1,ஆக வகைப்படுத்தப்படுவதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர பெறு பேறுகளின் அடிப்படையில் இவர்கள் தரம்2இல் வகைப்படுத்தப்படவுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை மேலும் ஒரு தொகுதியினர் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக நியமனம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ.3)

# தவக்கால சிந்தனை



8 ஆம் நாள்

எமது மனமாற்றத்திற்குத் தகுந்தகாலமான இத்தவக்காலத்தில் இறை சித்தத்திற்குரிய செயல்களில் ஈடுபட அழைப்புப்பெற்றுள்ள நாம், அதற்கு மாறான நெறிமுறைகளிலும் தீச்செயல்களிலும் ஈடுபட்டு எம்மையும் எமதுகிறிஸ்தவ வாழ்வையும் கறைப்படுத்துவது ஏன்?பரிவும் இரக்கமும்உள்ள இறைவன் எம்மனமாற்றத்திற்குக்காலத்தை அருளுவது அவர் எம்மீதும்.எம் சுதந்திரத்தின் மீதும் வைத்துள்ள மதிப்பின் காரணமேயாகும் ஆனால் அவருடையநீடிய பொறுமையை மனிதன்மதியாது அவரைச்சோதிக்கமுற்படுகின்றான். இஃது இறைவனைப்பாதிப்பதில்லை மாறாக அதுமனிதன்மீது, மனித சமூகத்தின் மீதும் தான் விழுகின்றது. இறைவாக்கினரான யோனாசும் நினிவே நகரமக்களுக்கு இறைவனின் வார்த்தையை அறிவித்து அவர்கள் மனமாற்றம் அடையவேண்டும் அன்றேல் அழிவுக்கு உள்ளாவர்கள் என்று அறிவிக்கும் போது அங்கு அரசன் முதல் யாவரும் இறைவனது வார்த்தைக்கு மதிப்பளித்துமனமாற்றம் அடைகின்றனர்.இவ்வாறு நாமும் எமது வாழ்வில் இறைவார்த்தைக்கு மதிப்பளித்து. அதன் மேன்மையை உணர்ந்து எமது தீயநெறியை விட்டு முற்றிலும் புதுவாழ்வு வாழும் சமூகமாக எம்மை மாற்றுவோம். இறைமகன் கிறிஸ்துவில் விளங்கிய நிபந்தனை அற்ற அன்பையும், மன்னிப்பையும், இரக்கத்தையும் எம் வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் பின்பற்றுவதன் மூலம் அவருக்காக நண்பருக்காக ஏன் எம் பகைவருக்காக எம்மையே உடைத்துக் கொடுப்பதன் மூலம் எமது மனமாற்றத்தை உறுதிப்படுத்துவதுடன் எம்மைச் சூழ்வுள்ளோரையும் மனமாற்றம் நிறைந்த புதுவாழ்வுக்கு அழைக்கும் இறைவனின் கருவிகளாக நாம் வாழ்வோம்.

S.M வுளோறன்ஸ்

# கெருடாவிலில் சிங்கள வகுப்புகள்

(பொலிகண்டி)

பருத்தித்துறை கெருடாவில் பகுதி பாடசாலை ஒன்றில் சனி, ஞாயிறு தினங்களில் சிங்கள வகுப்பு இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கெருடாவில் இளைஞர் கழகத்தினர் மேற்கொண்டு வரும் இப்பயிற்சி வகுப்பிற்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தினர் ஆதரவு வழங்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

# புகையிலைச் செடிக்கு புதுவித நோய்

(இணுவில்)

இணுவில், உடுவில், பாலாவோடை, மருதனாமடம், போன்ற பகுதிகளில் செய்கை பண்ணப்படும் புகையிலைச் செடியில் புதுவித நோய் பரவுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(க)

# வண்ணமலர்ப் பாதமதை வழுத்தி வாழ்வோம்

பண்ணொடிசை பாடிடுவார் பாவம் போக்கி
படியருளிக் காத்தருளும் புண்ணியனே
விண்ணுலகத் தேவர்களும் வியந்து ஏற்றும்
வெண்ணீறு அணிமார்பு விரிந்து ஒளிர
உண்ணுலவு சடைமுடிமேல் கங்கை சூடி
உமைவாலாம் பிகையுடனே உவந்திருந்தே
வண்ணையதில் வாரியருள் வைத்தீஸ்வரனே
வண்ணமலர்ப் பாதமதை வழுத்தி வாழ்வோம்.

இ. குகதாசன்
(நாயன்மார்கட்டு)

(யாழ் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது.)

# ஈரானில் பத்திரிகை ஆசிரியர்மீது தாக்கு; மயிரிழையில் தப்பினார்

[தெஹரான்]

ஈரான் நாட்டின் சீர்திருத்த இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரும் சீர்திருத்தம் கோரும் தலையாய பத்திரிகை ஒன்றின் ஆசிரியருமான சயித் ஹஜ்ஜாரியான் தலைநகரில் வைத்துச் சுடப்பட்டார்.

தெஹரான் மத்தியில் உள்ள கௌன்சில் கட்டடம் ஒன்றுக்கருகில் வந்துகொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கி நபர் ஒருவர் இவரது கழுத்துப் பகுதியில் சுட்டுவிட்டு தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக மருத்துவமனை தீவிரகண் காணிப்புப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட சயித் ஹஜ்ஜாரியானின்நிலை திருப்தி கரமானதாக காணப்படுகின்ற போதும் கழுத்தில் பாய்ந்த குண்டினை அகற்றும் வகையில் சத்திர சிகிச்சை ஒன்றினை மேற்கொள்ள வேண்டி இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம் பழமைவாதிகளின் கையோங்கி இருந்த ஈரானிய பாராளுமன்றம் அடுத்த மாதமளவில் சீர்திருத்தவாதிகள் ஆதிக்கத்தில் செல்லவிருக்கும் இவ்வேளையில் இடம் பெற்றிருக்கும் இக்கொலை முயற்சி தொடர்பாக பலவித அபிப்பிராய பேதங்கள் தோன்றியுள்ளன.

முக்கிய தலைவர் ஒருவர் இவ்வாறு நடுத்தெருவில் தாக்கப்பட்டிருப்பது நாட்டின் கொந்தளிப்பு மிகும் எதிர்காலத்துக்கு கட்டியம் கூறுவதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஈரானிய ஜனாதிபதி இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்திருப்பதுடன் விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உடனடிக் கட்டளை பிறப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

## ஜப்பானின் பொருளாதாரம் மந்தகதியில் என அறிவிப்பு

ஜப்பானின் பொருளாதாரம் மந்த நிலையில் உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாண்டின் கடைசி மூன்று மாதங்களில் அந்த நாட்டின் தேசிய உற்பத்தியில் 1.5 வீதம் குறைந்தது.

கடந்த ஐம்பது வருடங்களில் ஜப்பானின் பொருளாதாரம் இவ்வளவு மந்தமாக வந்துள்ளது.

ஊழியர்களுக்கு மிக குறைந்த அளவே ஊதிய உயர்வு கொடுக்கப்படுவதாலும் குளிர்கால போனஸ் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளதாலும் மந்த நிலை உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## கிளிங்டன் வரவை எதிர்த்து சி. பி. எம். ஆர்ப்பாட்டம் நடத்தும்

[புதுடில்லி]

காஷ்மீர் பிரச்சினையை சர்வதேசப் பிரச்சினையாக்க அமெரிக்கா முயல்வதால் மார்ச் 21-ஆம் திகதி அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் வரவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சி. பி. எம்.) அறிவித்துள்ளது.

கட்சியின் மூன்று நாள் கூட்டத்தின் பின் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது,

காஷ்மீர் எல்லையை உலகிலே அபாயகரமான இடம் என கிளிங்டன் கூறியதை அடுத்து இந்த முடிவுக்கு சி. பி. எம் வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது, (து)

# இந்தியாவில் தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு விசேட மாநாடு

(புதுடில்லி)

இந்தியாவில் அதிகரித்து வரும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான மாநாடு ஒன்று நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி மத்திய அரசினால் கூட்டப்படவிருக்கும் இம் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு தீவிரவாதச் செயற்பாடுகளினால் பாதிக்கப்படும் மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும் மாநில காவல்த்துறைப் பொறுப்பதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேசமயம்;

பீஹார், ஜம்முகாஷ்மீர், கர்நாடக மாநிலங்களில் அதிகரித்துவரும் தீவிரவாத நடவடிக்கைகளால் நாளுக்குநாள் உயிரிழப்புகள் பெருகிவருவது குறிப்பிடத்தக்கது. [க-து]

## டில்லியில் வழக்கறிஞர்களின் வேலை நிறுத்தம் தீவிரம்

(புதுடில்லி)

புதுடில்லியில் பதினெட்டு நாட்களாகத் தொடரும் வழக்கறிஞர்களின் வேலை நிறுத்தம் தீவிரமடைந்துள்ளது.

எட்டுச்சட்டக் கழகங்களின் வழக்கறிஞர்கள் நேற்று முன்தினம் உண்ணாவிரதத்தையும் தொடங்கியுள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி வழக்கறிஞர்கள்மீது மூன்று பொலிஸ்காரர்கள் தடியடி நடத்தியமைக்காக அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்றும் கோரி வேலைநிறுத்தம் தொடர்வதாக அறிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் வழக்குகளின் விசாரணைகள் ஸ்தம்பித நிலையில் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## உலக வலம்

### ரூ. 60 கோடி பெறுமதிமிக்க போதைப் பொருள் இந்திய எல்லையில் கைப்பற்றப்பட்டன

(புதுடில்லி)

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு கடத்தப்பட்ட சுமார் 60 கிலோகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருட்களை இந்திய எல்லைக்காவல் படையினர் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் சர்வதேச சந்தையின் பெறுமதி 60 கோடி ரூபாய்கள் என மதிப்பிடப்படுகின்றன.

போதைப்பொருட் கடத்தல்காரர்கள் பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர்கள் என்பது உறுதியாகி இருப்பதாகவும், அவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இந்தியத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9)

## சனியன்று காரைக்குடியில் கம்பனுக்குப் பெருவிழா

ஆண்டு தோறும் நடத்தப்பட்டுவரும் கம்பன் விழா வருகிற சனிக்கிழமை காரைக்குடியில் தொடங்க இருக்கிறது.

பல பிரிவுகளாக நடைபெறும் விழாவில் பன்னாட்டு அறிஞர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இலங்கையைச் சேர்ந்த பார்வையாளர்களும் உரைஞர்களும் கலந்து கொள்ள இருப்பதாக அறியமுடிகிறது. (து)

## கிளர்ச்சிக்குழுத் தலைவர் கைது ரஷ்ய அரசாங்கம் அறிவிப்பு

(மாஸ்கோ)

செச்சினிய கிளர்ச்சிக்குழுத் தலைவர்களில் ஒருவரான சல்மான் ஹஜியா என்பவரைக் கைது செய்திருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது:

கைது செய்யப்பட்டகிளர்ச்சிக்குழுத் தலைவரை மேலதிக விசாரணைகளின் பொருட்டு மாஸ்கோ அழைத்து வந்திருப்பதாக ரஷ்யாவின் தற்காலிக அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் படைகளுக் கெதிரான பல தாக்குதல்களிற்கு தலைமை வகித்த இப்போராளிக்குழுத் தலைவரை அவர்கள் மறைந்து வாழும் பகுதிகளுக்குச் சென்று சுற்றி வளைத்து தேடுதல் நடாத்திய போது கைது செய்திருப்பதாக ரஷ்ய தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9-எஸ்)

## மெழுகுதிரி விளைவித்த விபரீதம் தீயில் கருகி மாணவிகள் பலி

[ஆக்லாந்து]

பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 17 பாடசாலை மாணவியர் பலியாகினர்'

தபாலு என்னும் தீவில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரத்தாலான வகுப்பறைக் கட்டடமொன்றில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த மெழுகுதிரி வீழ்ந்ததில் அக்கட்டடம் தீப்பற்றிக் கொண்டது.

இது தீயணைப்பு வசதிகள் அற்ற மிகச் சிறிய தீவாகையால் தீயணைப்பு முயற்சிகள் எவையும் மேற்கொள்ளப்படாததாலேயே மேற்படி 17 மாணவிகளும் அநியாயமாய் மாண்டனர் எனத் தெரிய வந்துள்ளது' (க-9-எஸ்)


### செய்திக் குவியல்

★ தென்னாபிரிக்க நாடுகளைச் சேர்ந்த ஒரு கோடி மக்கள் தோல் வியாதியால் பாதிக் கப்பட்டிருக்கிறார்கள் மொசாம்பிக்கின் வெள்ள நிலைமையேஇதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

★ இந்திய மத்திய மந்திரி சபையில் மூன்று மந்திரிகள் காலியான இடங்களுக்கு நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

★ மக்கள் விரும்பினால் கள்ளுக் கடை திறக்க அனுமதியளிப்பதாக தமிழக முதல்வர் மு. காருணாநிதி கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

★ பாகிஸ்தான் வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். சட்டத்தரணி ஒருவரின் கொலையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

★ பாகிஸ்தானில் உள்ளூர் ஆட்சி மன்றங்களின் தேர்தலுக்கான அறிவித்தல் வெளியாகியுள்ளது.

★ தமிழ் நாட்டிலிருந்து பாலை மீன் குஞ்சுகளை உயிருடன் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (து—எஸ்)


# இந்தோனேசியாவில் கலவரம் இருதினங்களில் மட்டும் 30பேர் பலி

## மதவேறுபாடு காரணமாம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் மொலுர்க்காஸ் தீவுகளில் கடந்த சில தினங்களில் இடம் பெற்ற மதக்கலவரங்களில் 30பேர் கொல்லப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இருவாரங்களாகமொலுாக்காஸ் தீவுகளில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையேயான மோதல்கள் தணிந்திருந்த போதிலும், மீண்டும் மதக்கலவரங்கள் பரவலாக ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேசமயம் கடந்தவருடம் தொடக்கம் மொலுாக்காஸ் தீவில் நடைபெற்றுவரும் மதக்கலவரங்களில் இதுவரை 1700இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது (க-9)

## நாற்பது பாக். குற்றவாளிகளைத் தேட இன்டர்போலின் உதவியை நாடல்

[இஸ்லாமபாத்]

பல்வேறு குற்றங்கள் சுமத்தப்பட்ட 40 பாகிஸ்தானியர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கைக்கு சர்வதேச பொலிஸின் உதவியை பாகிஸ்தான் அரசு நாடி இருப்பதாகதெரியவருகிறது.

நீண்ட காலமாக தேடப்பட்டுவரும் இவர்கள் சமூக, அரசியல் குற்றங்களுடன் தொடர்புபட்டிருப்பதுடன் உலகின் பல நாடுகளிலும் தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (து)

## முஸ்லிம் வாலிபர் திருமணம் அரசு விடுத்துள்ள கோரிக்கை

(கோலாலம்பூர்)

மலேசியாவில் வசிக்கும் இந்திய முஸ்லிம்கள், வெளி நாடுகளைச் சேர்ந்த பெண்களைத் திருமணம் செய்ய வேண்டாமென அந்நாட்டரசு கோரிக்கை விடுத்துள்ளது.

மலேசியாவில் வாழும் இந்திய முஸ்லிம் இளைஞர்கள் இந்தியா சென்று அங்குள்ள பெண்களைத் திருமணம் முடிக்கும்போக்கு அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகிறது.

இதனால் மலேசியப் பெண்களைத் திருமணம் செய்வதற்கு ஆளில்லாமல் போய் விடும் அபாயநிலை தோன்றி விடும் எனும் அச்சத்தினாலேயே அரசு மேற்படிகோரிக்கையினை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இருப்பினும், மலேசிய ஆண்களைவிடப் பெண்கள் அதிக படிப்பறிவுமிக்கவர்களாய் இருப்பதால்தம்மிலும் படிப்பில் குறைந்த ஆடவர்களை திருமணம் செய்ய விரும்பாத பெண்களின் மனப்போக்கே, ஆண்களை இவ்வாறு வெளிநாட்டுப் பெண்களில் நாட்டம் கொள்ளத் தூண்டி இருப்பதாக வேறு செய்திகள் சில தெரிவிக்கின்றன. (க-9-எஸ்)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள்

## வினா இல. 09

(1) பாடசாலை விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது நீர் காணக்கூடியவற்றை தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.
(1) பாடசாலைக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கும்.
(2) பார்வையாளர்கள் அனைவரும் மைதானத்தினுள் காணப்படுவார்கள்.
(3) நிகழ்ச்சிகள் பற்றிய அறிவிப்புக்கள் இடம் பெறும்.
(4) போட்டிகள் ஆரம்பமாகும் இடத்திற்கு மாணவர்கள் போவார்கள்.
(5) வெற்றி மேடையில் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

(2) ஆடு மாடுகளின் கூட்டம்
(மந்தை, படை, குவியல்)
(2) பழங்களின் அடுக்கு
(குலை, வரிசை, தொகுதி)
(3) திறப்புக்களின் தொகுதி
(கூட்டம், கோர்வை, கட்டு)
(3) சுத்தமாக இருக்கவிரும்பும் பிராணி
(பூனை, நாய், எலி)
(4) எறும்பின் நற்பழக்கவழக்கங்களில் ஒன்று
(குழுவாகச் செயற்படல், அதிகாலையில் நடமாடல்)

(3) ஒருவட்டமான வீதியில் ஒரே இடத்திலிருந்து சங்கீதா ஒரு திசையில் ஓட தாரகையும் அபயனும் எதிர்திசையில் ஓடுகிறார்கள். சங்கீதா பாதிவட்டம் ஓடுவதற்கு முன்னரே அபயனைச் சந்திக்கிறாள். சங்கீதா பாதி வட்டத்தைக் கடந்த பின்னர் தாரகையைச் சந்திக்கிறாள்
(1) மிக மந்தமாக ஓடுபவர் யார்?
(2) மிக வேகமாக ஓடுபவர் யார்?
(3) மூவரும் பங்குபற்றிய விளையாட்டு ஒரு சுவட்டு விளையாட்டு ஆகும். (ஆம்,இல்லை)
(4) ஒரு ரூபா நாணயத்தின் தடிப்பு ஏறத்தாழ இரண்டு (CM,MM)
(5) ஒரு விளையாட்டு மைதானத்தின் ஓட்டப் பாதையின் நீளம் காட்டப்படும் அலகு
(மீற்றர், லீற்றர், அடி)

(4) ஒரு தீப்பெட்டி ஒன்றில்
(1) விளிம்புகள் யாது?
(2) உச்சிகள் யாது?
(3) பக்கங்கள் யாது?
(4) காலை சூரியன் உதிக்கும் திசையை தலைகீழாகப் பார்த்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவனது வலதுகை எத்திசையை நோக்கிக் காணப்படும்.

(5) கீழுள்ள சலவைப்பவுடருக்கான விளம்பரத்தை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
மிதுனா சலவைப்பவுடர். பளபளப்பான சலவைக்கும் நறுமணம் கமழும்ம ணத்திற்கும் கேட்டுவாங்குங்கள் மிதுனா சலவைப்பவுடர்
(1) சலவைப்பவுடரின் பயன்பாடு யாது?
(2) இச்சலவைப் பவுடர் எங்கு கேட்டு வாங்க் வேண்டும்?
(3) நறுமணம் என்பதன் எதிர்க்கருத்து சொல்யாது?
(4) மணம் என்பதன் ஒத்தசொல்

(தொகுப்பு: திருஞானசேகரன்)

---

குறிப்பு:-
இதற்கான விடைகளை 20-03-2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

---

**கல்விப்பகுதி வினா இல. 09**
**"வலம்புரி"**
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ....................................

சொந்த முகவரி: ....................................

கற்கும் பாடசாலை: ....................................

மாணவர் கையொப்பம்: ....................................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளை தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை வினா இல. 08

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம்

(01) செ. பார்கவி மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வி.
(02) க. சசிதாஸ் கிளி / பளை மத்திய கல்லூரி.
(03) சி. சம்பூரணி வட்டு / யாழ்ப்பாணக் கல்லூரி.
(04) பி. கிஷோர்ராஜ் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(05) மோ. லக்சனா யாழ். ச. இ. க.
(06) இ. அர்சசஜா மட்டுவில் அ. மி. த. பாடசாலை.
(07) சி. டினேசன் உடுவில் மகளிர் கல்லூரி.
(08) ச. சௌமியா சுழிபுரம் ஆறுமுக வி.
(09) ம. சுபாஜினி யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
(10) பா. சாரங்கன் யாழ். சென். ஜோன் பொஸ்கோ
(11) த. சயராம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி
(12) ச. வாகுலன் சாவ. இந்து ஆரம்ப பாடசாலை
(13) செ. தர்ஷிகா யாழ். திக்கம் சித்திவிநாயகர் வி.
(14) யோ. கம்ஷன் யாழ். பரியோவான் கல்லூரி
(15) தி. கஜவரன் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி
(16) நி. ஹரிலோகஜீனன்யாழ். புனித ஜோண் பொஸ்கோ
(17) க. பிருந்தா யாழ். திக்கம் சித்தி விநாயகர்
(18) வே. நித்யா யாழ். திக்கம் சித்தி விநாயகர்
(19) யோ. கிருபாஜினி ஏழாலை புனித இசிதோர்றோ. க. த. க. பாடசாலை
(20) பா. மயூரிகா கோண்டாவில் தெற்கு றோ. க. த. க. பாடசாலை
(21) ச. ஆகவன் யா. க இ. த. க. பாடசாலை
(22) சி. லக்சாயினி இருபாலை சீ. சீ. தமிழ்க்கலவன் பாடசாலை
(23) ஆ. கலைச்செல்வி மாதகல் சென். யோசப் ம. வி.
(24) க. ராகசொரூபி யாழ். புனித ஜோண் பொஸ்கோ
(25) வ. ஹர்ஜினி யாழ். புனித ஜோண் பொஸ்கோ
(26) க. யசிந்தன் கொக்குவில் மேற்கு சி. சி. த. க. பாடசாலை
(27) வி. கலினா யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(28) க. நிறோஷன் அராலி சரஸ்வதி மகா வி.
(29) வி. பிரியங்கா யாழ். தேவரையாளி இந்துக்கல்லூரி
(30) அ. ஜனாத்தீபன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(31) சி. ஜெசிகீசன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(32) ச. பிரியா யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்தமிஷன் வி.
(33) ஷ். சுஜிர்த்தா
(34) இ. தரங்கினி யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(35) பு. இரோஷன் யாழ். விவேகானந்தா வி.
(36) இ. கரன் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வி.
(37) உ. தனுஜா இருபாலை சீ. சீ. த. க பாடசாலை
(38) அ. சசிகலா யாழ். மணியகாரன் தோட்டப் பாடசாலை
(39) சி. கோபிநாத் யாழ். சிந்மயபாரதி வி.
(40) ஜெ. சுகன்யா கைதடி கலைவாணி வி.
(41) லோ. சுர்ஷிகா சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
(42) க. தேவகி சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
(43) க. கல்சியா கைதடி கலைவாணி வி.
(44) இ. சாஜிபானு கோண்டாவில் இந்து மகா வித்.
(45) இ. நிதர்ஷன் யாழ். புனித ஜோண்பொஸ்கோ
(46) கா. சுதாகரன்வலந்தலைவடக்கு அ. மி. த. க. பாடசாலை
(47) ம. ஜனனி உயரப்புலம் குணபாலன் வித்.
(48) த. நிவர்சன் மட்டுவில் தெ. சரஸ்வதி கனிஷ்ட வி.
(49) போ. தர்ஷிக்கா யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(50) து. றாம்ஜீத் சாவ. மகளிர் கல்லூரி
(51) பா. நிருஜா சாவ. டிறிபேக் கல்லூரி
(52) கி. துவாரகா யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
(53) ரி. பிறேமசாயினி உயரப்புலம் குணபாலன் வி.
(54) த. கஸ்தூரி சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
(55) இ. வாகினி யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
(56) கோ. கிருஷாந்தி இணுவில் மத்திய கல்லூரி
(57) ந. பாரத் கைதடி விக்னேஸ்வரா வி.
(58) கோ. ரூசாந்தா நாவற்குழி வி.
(59) ச. யோகாம்பிகை கோப்பாய் நாவலர் வி.
(60) ஜெ. மதிமுகன் மீசாலை வீரசிங்கம் மகா வி.
(61) சு. செந்தூரன் சாவ. மகளிர் கல்லூரி
(62) து. வத்ஸன் யாழ். புனித ஜோண் பொஸ்கோ
(63) வ. அனுசன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(64) வே. தேவகுமாரி வலந்தலை வ. அ. மி, த. க. பாடசாலை
(65) சி. சிவறஞ்சினி யா. தா. இ. த. க. பாடசாலை
(66) அ. திவ்விகா சாவ. சரஸ்வதி கனிஷ்ட வி.
(67) இ. கஜீபன் கைதடி கலைவாணி வி.
(68) கு. எஜிதரன் கொக்குவில் கி. ஸ்ரீராமகிருஷ்ணாவி.
(69) கு. அனித்தியா யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
(70) சி. கிருபாலினி அராலி சரஸ்வதி ம. வி.
(71) ச. ஷாமளா யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாட
(72) நி. குஜிந்தன் நுணாவில் கி. அமிர்தாம்பிகை வி.
(73) றே. பபிதா யாழ். ஸ்ரீ பார்வதி வி.
(74) த. திருக்குமரன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(75) த. தக்சனா கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
(76) ஆ. ஜீவகன் சா. டிறிபேக் கல்லூரி
(77) ஜனனி சா. றிபேக் கல்லூரி
(78) ஜே. மேரிறதனா யாழ். கன்னியர்மடம் ம. வி.
(79) ஆ. சந்தியா கைதடி கலைவாணி வி.
(80) இ. பானுஜா கைதடி கலைவாணி வி.
(81) கு. நிறோஜன் ளகதடி கலைவாணி வி.
(82) சி. துவாரகா யாழ். மணியகாரன் தோட்டப் பாடசாலை
(83) கு. மதீசன் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
(84) சி. சுஜிந்தன் யாழ். ஸ்ரீ பார்வதி வி.
(85) ர. சனுஜா யாழ். கன்னியர்மடம் ம. வி.
(86) ப. லக்சனா மணியகாரன் தோட்டப் பாடசாலை
(87) வி. வின்ஜக்ஷன் யாழ். புனித ஜோண் பொஸ்கோ
(88) ந. சுஜீவன் யாழ். மாணிக்கவாசகர் வி.
(89) வி. ஜனனி சித்திவிநாயகர் வி.
(90) மோ. மொறின் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
(91) கி. ராஜ்கண்ணா யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(92) யோ. ரஜீகன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகள் கையளிப்பு

(வவுனியா)

சமூக பொருளாதார சூழல் அபிவிருத்தி நிறுவனத்தினால் நிறுவப்பட்ட 50 வீடுகள் வவுனியாவில் குடும்பத்தலைவரை இழந்த பெண்களுக்கு வழங்கப்பட்டது.

வவுனியா செக்கடிப்பிளவு கிராமசேவையாளர் பிரிவில் உள்ள புதிய கோவிற்குளம் என்னுமிடத்தில் இவ்வீட்டுத் தொகுதி நிறுவப்பட்டுள்ளது.

இவ் வீடு கையளிப்பு வைபவத்தில் வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் வீடமைப்பு அதிகார சபைப் பொது முகாமையாளர் உட்பட பிரமுகர் பலர் கலந்து கொண்டனர்.

## தொழிற்சாலை எரிந்து நாசம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடியில் உள்ள மிக்சர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் காஸ்சிலிண்டர் வெடித்ததால் அத்தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியது.

சுமார் மூன்றுமணித்தியாலங்கள் எரிந்த இந் நிறுவனத்தில் கடமையாற்றிய ஊழியர்கள் அனைவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். ந(60)

## இடமாற்றம்

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. என். குணசீலன் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் புதிய அதிபராக பருத்தித்துறை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். ஸ்ரீபதி பெறுப்பேற்றுள்ளார். (க-52)

## விபரங்கள் திரட்டல்

(அரியாலை)

நல்லூர் இராஜதானி ஜே/107 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் கணவனை இழந்த பெண்கள் தொடர்பான விபரங்கள் பதிவுசெய்யப்படவுள்ளது.

இதற்கு உலர் உணவு பங்கீட்டு அட்டை, கணவனின் மரணச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, மாதாந்த உதவிப்பண அட்டை, பிள்ளைகளின் பிறந்த திகதி, போன்ற ஆவணங்களுடன் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சம்பந்தப்பட்டோர் தவறாது சமூகம்தரும்படிகிராம அலுவலர் கேட்டுள்ளார். [க-84]

## பயிற்சிப் பட்டறை

(அரியாலை)

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள 'சாந்திகம்' உளவளத்துணை நிலையத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை 'தற்கொலைக்கான முயற்சி' என்னும் தொனிப் பொருளிலான பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

இதில் பேராசிரியர் டி.ஜே சோமசுந்தரம், வணபிதா எஸ். டேமியன், வணபிதா எஸ். ஜே இராஜநாயகம், வைத்திய கலாநிதி எஸ். சிவயோகன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

இப்பயிற்சிப் பட்டறையில் உளவளத் துணையாளர்கள், மருத்துவத்துறை சார்ந்தவர்கள் உளநலத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க-84)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள்

## வினா இல. 09

5ஆம் பக்கத் தொடர்ச்சி

(6) பின்வரும் பாடலைப் படித்த பின் அதன் கீழுள்ள் வினாக்களுக்கு விடை தருக

மேசை விளக்கேற்றி—நாற்காலி
மீதில் அமர்ந்தே—நான்
ஆசைத் தமிழ் படித்தேன்—என்னருமை
அமமா அருகே வந்தார்
மீசைத் தமிழ் மன்னர் தம் பகையை
வென்ற வரலாற்றை
ஓசையுடன் படித்தேன் -அன்னை
மகிழ்வுற்றதை என்ன சொல்வேன்

1. நான் படித்த வரலாறு எது
2. என் அம்மா ஏன் மகிழ்வடைந்தார்
3. நான் படித்த நேரங்கா எவை
4. ஒத்த கருத்து தருக ஓசை...... நாற்காலி......
5. எதிர்ச்சொல் தருக அமர்ந்து...... விளக்கேற்றி......

(7) சொற்களை வைத்து வசனம் அமைக்குக
கற முற, குபு குபு, கல கல, குறுக்கும் நெடுக்கும், அக்கம் பக்கம்

(8) பொருத்தமற்ற சொல்லின் கீழ்க் கோடிடுக
(1) சுனை, பொய்கை, வாவி, கடல், குளம்
(2) கோன், மந்திர், மன்னன், காவலன், அரசன்
(3) துக்கம், மகிழ்ச்சி இன்பம், சந்தோஷம், உவகை
(4) கோரை, அறுகு, நெல், நெற்சப்பி, கோழிச்சூடன்
(5) கரட், பீற்றூட், முள்ளங்கி, போஞ்சி, உருளை

(9) பின்வரும் மாதங்களை ஆங்கிலத்தில் தருக
(1) தை.............. (2) ஆனி..............
(3) பங்குனி.............. (4) ஆடி..............
(5) மார்கழி..............

(10) பின்வரும் பந்தியை வாசிக்கவும்

சித்திரை மாதம் 7ம் திகதி வானம் கறுத்து பின் மழை பெய்தது வைகாசி மாதம் 10 திகதி வானம் கறுத்தது அன்று மழை பெய்யவில்லை ஆனி மாதம் 12ம் திகதி வானம் கறுக்கமாலே மழை பெய்தது.
பின்வரும் கூற்றுகள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் கூற முடியாது ஆயின் ● எனவும் அடையாளமிடுக.

(1) சித்திரை மாதம் 7ம் திகதி மழை பெய்தது ( )
(2) வைகாசி மாதம் 10ம் திகதி மழை பெய்தது( )
)3) ஆனி மாதம் 12ம் திகதி வானம் கறுத்தது ( )
(4) வைகாசி மாதம் 10ம் திகதி வானம் கறுத்தது( )
(5) வானம் கறுத்தால் மழை பெய்யும் ( )

(11) பிரச்சினைகளை விடுவிப்போம்
(1) 400g கொண்ட A என்ற லக்ஸ்பிறே பைக்கட்டின் விலை 88.00 B என்ற லக்ஸ்பிறே பைக்கட்டின் விலை 100.00 இதில் மலிவான பைக்கட் எது? ஏன்?
(2) எனக்குரியது ஆனால் மற்றவர்களால் பயன் படுத்தப்படுவது அது என்ன?
(3) ஒரு மணிக் கூட்டின் சுற்றளவு 40 சதம மீற் அதன் செக்கன் கம்பி ந.ப 12.00 மணி தொடக்கம் ந.இ 12.00 மணிவரை எத்தனை தடவை சுற்றும்.
(4) ஒன்பது என்ற எண்ணை 5 நடவை பயன் படுத்தி ஆயிரம் என்ற பெறுமானத்தைக் காண்க
(5) இராமன் காந்தனை விட இரண்டு வருடங்கள் இளையவன் கமலாவை விட ஆறு வருடங்கள் இளையவன் கமலாவின் வயது எட்டு வருடக்காளயின் மூவரினதும் வயதுகளின்- கூட்டுத் தொகை எவ்வளவு?

(12) பயிற்சிக்காக பின்வரும் கட்டுரைகளை எழுதுக.
(1) பெருமழை பெய்தபின் கிராமத்தில் நான் கண்ட காட்சிகள்
(12) நான் பிச்சைக் காரனாக இருந்தால்

ஆக்கம்: முத்துச்சாமி விக்னேஸ்வரன்
(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)

குறிப்பு:-
இதற்கான விடைகளை 20 - 03 - 2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை வினா இல. 08

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபர 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

(93) சோ. தர்சிக்கா யாழ். புனித மரியாள் வி.
(94) கு. இராகுலன் வலந்தலை வ. அ. மி. த. க. பாடசாலை.
(95) சு. ரதீபா ஏழாலை புனித இசிதோர் றோ. க. க. த. க. பாடசாலை
(96) ஜெ. நிலுஜா கப்பூது ஏகாம்பர வி.
(97) மா. ஹரிப்பிரவீன் யாழ். பரியோவான் கல்லூரி
(98) சி. கார்த்தீபன் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன்
(99) செ. நிரோஸ்வர்மன் யாழ். பரியோவான் கல்லூரி
(100) கி. அனுசலா உயரப்புலம் குணபாலன் வி.
(101) கு. பகீரதன் திருநெல்வேலி இ. த. க. பாடசாலை
(102) க. சிந்துஜா ஏழாலை இசிதோர் றோ. க. த. க.வி.
(103) லெ. துவாரகன் எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசா வி.
(104) சி. கஸ்தூரி நுனாவில் கி அமிர்தாம்பிகை வி.
(105) ஜெ. கேசவன் தேரையாளி இந்துக் கல்லூரி
(106) கு. ராகுலன் சாவ. அ. த. க. பாடசாலை
(107) சி. தனுஸ்கா யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
(108) சி. சுபசக்தி உயரப்புலம் குணபாலன் வி.
(109) கா. அரிஹரன் யாழ். சீ. சீ. த. பாடசாலை
(110) க. ராம் யாழ். தேவரையாளி இந்துக்கல்லூரி
(111) இ. மீநிலா யாழ். புனித ஜோண் பொஸ்கோ
(112) ஜா. மொனிஷா யாழ். இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை
(113) இ. தணிகைவாசன் புனித ஜோண் பொஸ்கோ
(114) ந. சாமினி கப்பூது ஏகாம்பரம் வி.
(115) இ. ரகுராம் புனித. ஜோண் பொஸ்கோ
(116) இ. தக்ஷாயினி கல்வியங்காடு இ. த. க. பாடசாலை
(117) செள. ஜெயகாந் உயரப்புலம் குணபாலன் வி.
(118) ப. நிரோஷன் யாழ்/ இந்து ஆரம்ப பாடசாலை
(119) மு. கஜனி சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
(120) வி. மதனராஜன் யா/தேவரையாளி இந்துக்கல்லூரி
(121) ஆ. கீதாஞ்சன் யா/தேரையாளி இந்துக்கல்லூரி
(122) சி. கார்த்திகா புனித ஜோண்பொஸ்கோ
(123) ச. கேதாரன் இருபாலை சீ. சீ. த. க. பாடசாலை
(124) சி. கிரிசாந் கந்தரோடை தமிழ்க்கந்தையாவி.
(125) ஜே. ரதீசன் மானிமெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
(126) கு. சத்தியதர்சன் யா/திக்கம் சித்திவிநாயகர்வி.
(127) ஆ. சஞ்ஜியா யா/நகர்கோவில் ம.வி.
(128) கு. லோசனா யா/திக்கம் சித்திவிநாயகர்வி.
(129) இ. தேசிகா சாவ. இந்து ஆரம்பபாடசாலை
(130) சு. அபிராமி கிளிபளைமத்தியகல்லூரி
(131) சி. நிலானி காசிநாதர்வி
(132) க. பிரசாந் தகாக்சுவில் இந்து ஆ. பாடசாலை

## புலமைப் பரீட்சை வினா இல. 08 விடைகள்

(1) (1) மேகம் (2) மாலைப்பொழுது
(3) அ - ஆச்சரியம் / அதிசயம் ஆ - நிறம்
(2) (1) நட்பு (2) நவீனம்/புதிய (3) தாழ்வு
(3) (1) பழங்கள்(2) நாடுகளில் (3) புடைவைகள்
(4) (1) Twelve (2) Nose (3) (Running
(5) (1) Today (2) Coconut (3) Hospital
(6) (1) ஆபிரிக்க நாட்டில் வாழும் அதிகளவான மக்கள் உணவுத்தட்டுப்பாட்டினால் அவதியுறுகின்றனர்.
(2) மாலை மயங்கி இருள்சூழும்போது சில பிராணிகளின் தொழிற்பாடு அதிகரிக்கும்.
(7) (1) சரி (2) சரி (3) சரி (4) சரி
(8) (1) 43 Kg 500g/ $43\frac{1}{2}$ Kg (2) 2Kg
(9) (1) 2M (2) ரூபா 128 (3) ரூபா 228
(10) 2 ஆம் திகதி
(11) வடகிழக்கு / ஈசானமூலை
(12) (1) அ - உபயோகமற்ற நிறக்கடதாசிகள், உபயோகமற்ற புடைவைத்துண்டுகள் பசை (வேறுபொருள்கள்)
(2) அ - தையல்ஊசி நூல் துணி கடதாசி
(13) (1) சரி (2) மின்கலம் மின்குமிழ் இணைப்புக் கம்பி வயர் (3)ஆளி சுவிச்.
(14) (1) 38,30(2) 510,535 (3) 2012 ஆம் ஆண்டு
(15) (1) றெக்சன் (2) (130 மாபிள்கள்

## நிர்வாகிகள் தெரிவு

(நெடுந்தீவு)
நெடுந்தீவு மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின்புதியஆண்டுக்கான நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ். (அதிபர்) உபதலைவர் இரா. தருமரத்தினம் செயலாளர் இரா, தருமலிங்கம், பொருலாளர். ப. பரமலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(க-82)

★ ★ ★

தொண்டமானாறு விவேகானந்தா சனசமூகநிலையத் தலைவர் திரு. கா. அரசரத்னம் தெரிவுசெய்யப்பட்டார். இச்சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு.வே. பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது.

போஷகராக திரு.ரு. அருமைத்துரையும் கணக்குப் பரிசோதகராக திரு.வே.பரமானந்தமும் உபதலைவராக திரு. கு. சந்திரசேகரமும், செயலாளராக திரு.வ. சந்திரலிங்கனும், உபசெயலாளராக திரு.கு. சசிகுமாரும், பொருளாளராக திரு. அ.குணராசாவும்தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் 6 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

(52)

★ ★ ★

(நெடுந்தீவு)
நெடுந்தீவு ஐக்கியதீப சனசமூக நிலையத்தின் பொதுச் சபைஒன்று கூடலும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபையில்; தலைவராககோ. பகீரதன், பொதுச் செயலாளர் லி. ரமணன் செயற்குழு செயலாளர் கோ. பத்மநாதன் மையப் பொருளாளர் ப. கேதீஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் துறைசார் ரீதியாக சழங்களை அமைத்து, நிர்வாக நடவடிக்கைகளைப் பன்முகப் படுத்திச் செயற்படுவதில், நெடுந்தீவு ஐக்கிய தீப சனசமூக நிலையம் முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (க-82)

## அதிகரிக்கும் உருளைக்கிழங்கின் விலை

(அச்சுவேலி)
யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கின் விலை படிப்படியாகஅதிகரித்து வருவதை பரவலாகக்காணக்கூடியதாக உள்ளது.

அண்மைக்காலங்களாக ஒரு கிலோ 25ரூபாவாக விற்பனையாகி வந்த உருளைக் கிழங்கு தற்போது ஒருகிலோ 50 ரூபாவிலிருந்து 60 ரூபா வரை விற்பனை செய்யப் பட்டுவருகின்றது.

(க-14)

5 ஆம் தர மாணவர்களின் நன்மை கருதி, கூம்பு, உருளை போன்ற வடிவங்களின் உச்சி, விளிம்பு. மேற்பரப்பு, முகம் ஆகியவற்றின் சரியான எண்ணிக்கைகள் கீழே தரப்படுகின்றது.

| இல | வடிவங்கள் | உச்சிகளின் எண்ணிக்கை | விளிம்புகளின் எண்ணிக்கை | மேற்பரப்புகளின் எண்ணிக்கை | முகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (1) | கோளம் | 0 | 0 | 1 | 0 |
| (2) | உருளை | 0 | 2 | 3 | 2 |
| (3) | கனவுரு | 8 | 12 | 6 | 6 |
| (4) | சதுரமுகி (அறுமுகி) | 8 | 12 | 6 | 6 |
| (5) | கூம்பு | 1 | 1 | 2 | 1 |
| (6) | நான்முகி | 4 | 6 | 4 | 4 |
| (7) | கூம்பகம் (அடி சதுரவடிவமானது) | 5 | 8 | 5 | 5 |
| (8) | அரியம் (குறுக்குவெட்டு முக்கோணியாக உடையது) | 6 | 9 | 5 | 5 |

தொகுப்பு:- செல்வி சந்திரிகா நவரத்தினம்
(ஆசிரியை, யாழ். கொக்குவில் மேற்கு சி. சி. த. க. பாடசாலை)

## யாழ். மேல்நீதிமன்ற நீதிபதியாக கே பி. எஸ். வரதராஜா நியமனம்

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மேல் நீதிமன்ற நீதிபதியாக தற்போது திருகோணமலை மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றும் கே. பி. எஸ். வரதராஜா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றும் குமார் எக்கரத்ன மேலதிக நீதிபதி என். யோகசிகாமணி ஆகியோருக்கும் ஜனாதிபதியால் மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் கிடைத்துள்ளது.

இன்று 15ஆம் திகதி புதன்கிழமை இம்மூவரும் தமது கடமையைப் பொறுப்பேற்பர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றத்தைத் திறப்பதற்கான சகல முன்னோடி நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுவதுடன் சட்டமா அதிபர் சரத் என் சில்வா தான் பதவியேற்ற வைபவத்தில் யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றமொன்றைத் திறக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(க)

யாழ்ப்பாணம்

சிறகடித்துப்பறக்கட்டும் -
இடிக்கும் துணையாரை
ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்

- குறள்

# வலம்புரி

## இடிக்கும துணையாரை

சமாதானத்தை நோக்கி சகல சிந்தனைகளும் சேர்ந்து உருவாக்கம் பெறும் நேரம் இது. அந்த வேளையில் நிகழ்வுகள் பல குறுக்கிட்டாலும் கொண்ட கொள்கையில் குலைவுகள் ஏற்படமாட்டாது என்பது அமைச்சர் ஜெயரத்தினவின் கூற்று.

சீரொழுகு சான்றோர் சினம் பற்றி செந்தமிழ்ப் பாடல் பேசா நிற்கும். கற்பிளவோ டொப்பர் கயவர் என்றும் விற் பிடித்து நீர் கிழிய எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம் என்கிறது அச் செய்தி.

எது எவ்வாறாக அமையினும் உள்ளம் தெள்ளிதாக இருக்கும் வரை- கொண்ட கொள்கையில் உறுதியும் பற்றும் நிலைக்கும் வரை இலக்கை அடையும் முயற்சி தொடரத்தான் வேண்டும். இதனைத்தான் பல்வேறு முகங்களாக - பல்வேறு நிலைகளில் ஜனாதிபதி அம்மையார் கூறிநிற்கிறார். இந்தப் படியான சமாதானத்தை அடைய முடியும் என்பதைப் பச்சைக் கொடி காட்டுவதாக அமைகிறது.

கொட்டிலில் நிகழும் வாழ்வியல் சிக்கல்களை தன்னளவிலும் அனுபவித்தவர் சந்திரிக்கா குமாரதுங்கா. தலைவனின் நிழலில் பொதுவுடமையின் புனிதத்தைப் புரிந்து கொண்டவர். நாட்டின் தலைவர்களான பெற்றோரின் அரவணைப்பிலே வாழ்ந்து முதிர்ந்தவர்- சரியும் பிழையும் புரிந்து கொண்டு சமரசம் தேடி உழைப்பவராக தென்படுபவர்.

இந்த பஸ்வண்டி கடைசி பஸ் வண்டி. இதில் ஏறிப்பயணம் செய்யத் தவறினால் வேறு வண்டிகள் கிடைக்கப் போவதில்லை- பின்னர் கால் நடைதான் எஞ்சி நிற்கும் அது காட்டாற்று வெள்ளம் போல அழிக்க வேண்டிய அனைத்தையும் 'அழிக்கும் - சீரழிக்க வேறில்லை என்ற நிலையில் மேலும்' சுடுகாடாய் மரகதத்தீவு மண்ணாகப் போய்விடும்-

வருமுன் காப்பதறிவு என்ற கூற்று புரிய வேண்டிய தொன்று. வாழ்வியல் ஓட்டங்கள்புரியாது அரசியல் ஓடத்தைச் செலுத்த முடியாது. பிறர் தமர் என்ற பேதமிருந்தால் அரசியல் பிசுபிசுக்கும்.

- அன்புடன் ஆசிரியர்

## கொழும்பு குண்டு வெடிப்பில்

# சேதமடைந்த வீடுகளுக்குப் பதில் புதியன விரைவில் வழங்கப்படும்

### அரச தரப்பில் உறுதி

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலின் போது சேதமடைந்த வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகள் விரைவில் வழங்கப்படுமென அரச தரப்பில் உறுதியுரைகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொறளை சேர்ப்பன்ரைன் மாடிவீடுகளில் குடியிருப்பவர்களுக்கே இவ்வாறு புதிய வீடுகள் வழங்கப்படவுள்ளதாக அரச உயர்மட்டத்தினர் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட 16 குடும்பத்தவர்களுடனும் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலையடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதென தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பொதுமுகாமையாளர் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

புஞ்சி பொறளையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள 16 மாடிவீடுகள் இவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கென அப்பகுதிக்கான நீர், மின் விநியோக வேலைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேசமயம்.

பொரளை சேர்ப்பன்ரைன் மாடிவீடுகள் மக்கள் குடியிருக்க முடியாதவாறு பலத்த சேதமடைந்திருப்பதாகவும், அதனைப் புனரமைக்கும் பணிகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

(ச-9)

## விளையாட்டு வினையாகியது சிறுவன் பரிதாபகரமரணம்

### திருநெல்வேலியில் சம்பவம்

விளையாட்டுப் பொருள் போன்று காணப்பட்ட மர்மமான பொருளை எடுத்து விளையாடிய சிறுவன் அது வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு பரிதாபகரமாக மரணமானார்.

நேற்று முன்தினம் திருநெல்வேலியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் எஸ்.நிரேஸ் (வயது-8)என்பவரே பரிதாபகரமாக மரணமானவராவார். (க-57)

## இதுபோன்ற பரிதாப மரணங்கள் நிச்சயம் தவிர்க்கப் படவேண்டியவை

### அதிகாரி செல்வி ஜெனிபர் மேசன்

(அச்சுவேலி)

யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி, மிதிவெடிகள் தொடர்பாக பல்வேறு வகையான கருத்தரங்குகள், நாடகங்கள், போட்டிகள் போன்றன நடாத்தப்பட்டும் கூட இதுபோன்ற பரிதாப மரணங்கள் நிச்சயம் தவிர்க்கப்பட. வேண்டியவை என யாழ்.மாவட்ட கண்ணிவெடி விழிப்புணர்வு அதிகாரி செல்வி ஜெனிபர் மேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

வெடிப்பொருள்கள் மிகவும் ஆபத்தானவை. அவற்றைக் கண்டால் பொதுமக்கள் எவரும் அதற்கு அருகில்செல்லக் கூடாது.

வெடிப்பொருள் சம்பந்தப்பட்ட தகவலை அருகில்உள்ள படையினருக்கோ அல்லது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட கண்ணிவெடி அகற்றும் குழுவினருக்கோ உடன் தெரியப்படுத்தவும். (க-57)

# மூத்தோரை மதித்து கல்வியிலுயரும் மாண்பு இன்று நம்மிடையேஇல்லை

### வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் உரை

(யாழ்ப்பாணம்)

கல்வியே வாழ்க்கை வாழ்க்கையே கல்வி இந் நெறி முறையில் அன்று வாழ்ந்தவர்கள் மூத்தோரை மதித்தனர். அவர்தம் அறிவைப் பெற்று வாழ்வில் உயர்ந்து வளம் பெற்றனர். கல்விப்போதனையைத் தொண்டாகக் கருதி உண்மை விசுவாசத்துடன் உழைத்து உய்வு கொண்டனர்.

இந்த நிலை இன்றைக்கு எங்களிடையே கிடையாது. கல்வியாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய மதிப்பும் மரியாதையும் கல்வி நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுகிறது'' என்று வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் நா. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க பவள விழாவை ஒட்டிய இரண்டு நாள் நிகழ்வுகள் கடந்த 11, 12 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இடம் பெற்ற இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு ''கல்வி நிறுவனச் செயற்பாடுகள்'' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குகையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்;

இன்று மாணவர் மத்தியில் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கமானது அவர்களுடைய பண்பாட்டு ஒழுக்கச் செயற்பாடுகளில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தி நிற்கின்றது.

மீளவும் எமது சமூகம் பழைய நிலையை அடைந்து கல்வியையும் கல்வியாளர்களையும் மதித்து அவர்கள் காட்டுகின்ற வழியில் ஒழுக வேண்டுமானால் கல்வி நிறுவனச் செயற்பாடுகள் பாரம் பரியத்திற்குக் கையளிக்கப்பட வேண்டும்.

சைவசமயத்தை வளர்ப்பதன் பொருட்டு இராமநாதன் அவர்கள் கல்வி நிறுவனம் அமைத்து பணி செய்தார். ஆசிரியர்கள் நல்ல பயிற்சியாளர்களாய் மிளிர வேண்டும். என்பதற்காக சைவாசிரிய கலாசாலை நிறுவப்பட்டது. மாணவர்கள் நல்ல முறைகல் சமூகத்திடம் கையளிக்கப்பட வேண்டுமானால் ஆசிரியர் பயிற்றப்பட வேண்டும் எனும் நோக்கில் நிறுவனத்தின் உள்ளீடு செயற்பாடு வெளிப்பாடு என்ற நிலையில் ஆசிரியர் பயிற்றப்பட்டனர்.

பாடசாலைகளும் ஆசிரியர் கலாசாலைகளும் இணைந்து செயற்பட்டன. ஆசிரியர் வகுப்பறைத் தளத்தைச் சரியாக நிறுவினர்.

இந்நிலையிலேயே ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி அமைப்பு நோக்கப்படுகிறது, இராமநாதனின் கல்வி நிறுவனச் செயற்பாடு இதற்கு நல்லதோர் வழி காட்டியாய் உள்ளது.'' என்றார்

**பேராயர் உரை**

யாழ்ப்பாணத்தில் பிறமொழிக் கல்வியின் தாக்கம் எனும் தலைப்பில் கருத்துரை வழங்கிய பேராயர் அருட் கலாநிதி எஸ். ஜெபநேசன் உரையாற்றுகையில்,

ஆங்கிலக் கல்வியை யாழ்ப்பாணத்து மகளிருக்கு அறிமுகப்படுத்தியவர்கள் ஆங்கில மாதர்கள் ஆங்கிலேயப் பெண்கள் தங்களுடைய உயரிய இடங்களில் இருந்தும் கீழிறங்கி வந்து கறுப்பின மாதர்க்கு கல்வி கற்றுக் கொடுத்த வரலாறு யாழ்ப்பாணத்தில் தான் தொடங்கியது.

எங்களுடைய மக்கள் வெளிநாடு செல்வதால் நூல் நிலையப்பயன்பாடு குறைவுபட்டுப் போகின்றது. பழம் பெரும் வரலாற்று நூல்கள் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. பழைய நூல்கள் எமது எல்லைகளை வரையறுக்கின்ற கதிகால் போன்றவை தவறிவிட்டால் பின் வருந்தும் நிலை தோன்றும்'' என்று குறிப்பிட்டார்.

**திருமதி சண்முகதாஸ்**

இராமநாதனின் இலக்கு பேணப்பட வேண்டும். பண்பாட்டுக் கல்வியை வளர்த்தல் சமூகத்தில் கல்வியைப் பெறமுடியாத ஆதரவற்ற சிறார்களுக்கு கல்வி வழங்குவதன் மூலம் அவரது இலக்கினை நாமும் தொடர்ந்து முன்னெடுக்கலாம்.

ஏனைய சைவ நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு மனித விழுமியங்களை வளர்ப்பதற்கு ஏற்ற பழைய மரபான குருகுலக் கல்வியில் சில அம்சங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும் என்று சைவ வித்தியா விருத்திச் சங்கமும் எதிர்காலக் கல்வியும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய கலாநிதி திருமதி சண்முகதாஸ் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் பேராசிரியர் வ. ஆறுமுகம் விரிவுரையாளர் திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (க-9)

## பொங்கல் விழாவும் சொற்பொழிவும்

(இணுவில்)

சுழிபுரம் அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வரையும் நடைபெறவுள்ளது.

விழாக்காலங்களில் விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ''தேவி கடாட்சம்'' என்னும் தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் தொடர் சொற்பொழிவு ஆற்றிவருகிறார். [செ-49]

## பண்டத்தரிப்பில் மகளிர் தினவிழா

(மானிப்பாய்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பண்டத்தரிப்பு மாதர் அபிவிருத்தி நிறுவனம் நடாத்திய மகளிர் தினவிழா கடந்த 13 ஆம் திகதி பண்டத்தரிப்பு தையல் பயிற்சி நிலையத்தில் பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் துரையப்பா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். செல்வராசா, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி சண்முகநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இதன் பின்னர் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## மருதடி விநாயகர் மஹோற்சவம் 28 இல் ஆரம்பம்

[மானிப்பாய்]

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக நிர்வாகம், மருத்துவம், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகள் என்பன சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை 16 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தலைமையில் மேற்படி ஆலயத்தில் நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்)

## மஹா கும்பாபிஷேகம்

(அரியாலை)

திருநெல்வேலி சிவன் கோவில் நாளை வியாழக் கிழமை காலை 9.45 மணி தொடக்கம் சூரிய, சந்திர, பைரவமூர்த்திகளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. (செ)

## பங்குனிக் குளிர்த்தி அபிஷேகம்

(அரியாலை)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த பங்குனிக் குளிர்த்தி அபிஷேகம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## சுண்டுக்குளியில் இன்று தமிழ்த் தினவிழா

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் 2000 ஆம் ஆண்டிற்கான தமிழ் தினவிழா இன்று புதன்கிழமை (15/3/2000) பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி ரி. ராஜரட்ணம் தலைமையில் காலை 9 மணிக்கு நடைபெறும். (க-14)

## திம்புக் கோட்பாட்டின் அடிப்படையிலான தீர்வை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்வர்?

### ஜோசப் எம். பி. தெரிவிப்பு

(ஏறாவூர்)

''இந் நாட்டில் உள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியானது திம்பு கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் அதனையே விடுதலைப்புலிகளும் ஆதரிப்பாதாக அறிய முடிகிறது· சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் சமுகங்களினது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தொரு தீர்வையே தமிழர் விடுதலைக்கூட்டணியும் ஆதரிக்கும்''

ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற இல்லவிளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. சுந்தர்ராஜனின் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டியில் ஜோசப் பரராசசிங்கம்எம்.பி.மேலும் பேசுகையில்.

இந்த நாட்டின் வருமானத்தின் 32சதவீதம் போருக்குச் செலவாகின்றது. உலக நாடுகளில் மக்கள் தொகை அடிப்படையில் கவனித்தால் இலங்கையிலேயே மிக கூடுதல் இராணுவம் இருக்கின்றது.

இந்நாட்டின் யுத்தம் நிறுத்தப்படின் வருடாந்தம் 50 மில்லியன் ரூபாவை கல்வி, பொருளாதார அபிவிருத்திக்கு செலவிடமுடியும் என்று ஜோசப் எம்.பி. மேலும் தெரிவித்தார். [ச-101-108]

## பஸ்ஸில் பயணம் செய்த மூவர் மட்டக்களப்பில் வைத்துக் கைது

[கொழும்பு)

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த மூவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் மன்னம்பிட்டியில் உள்ள பிரதான சோதனைச் சாவடியில் நடைபெற்ற சோதனைகளின் போதே இம்மூவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்என்றும், ஏனைய இருவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது, (வ[

### புலிகள்--

இணைந்த ஓர் சமாதானத் தீர்வினையே மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்

இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகப்பதவியேற்ற பின் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்கா அளித்த முதலாவது பேட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

### 4 இராணுவ--

கல்ல கடந்த வருடம் மே மாதம் 21ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்ற விடுதலைப்புலிகளுடனான மோதலின் போது கொல்லப்பட்டதாகவும் விஜயானந்த டி அல்வில் என்பவர் 1998ம் ஆண்டு சிறையில் மரணமடைந்ததாகவும் அரசதரப்புச் சட்டத்தரணி யசந்த கொட்டா கொட நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அடுத்த சந்தேகநபரான அப்துல் நஸீரை கைது செய்யப்பிடியாணை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். இதனை அடுத்து அவரைக் கைது செய்யுமாறு நீதிவான் பிடியாணை பிறப்பித்தார்.

அப்துல் நஸீர் தற்போது பொலிஸ் சேவையில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்களின் சார்பில் சட்டத்தரணிகளான சாலிய பீரிஸ், அப்துல டி சில்வா, உபுல் குமாரபெருமா,உபாலி மொகாட்டி, ரஞ்சன நாயக்க ரட்ணா ஆகியோர் ஆஜரானார்கள்.

இவ்வழக்கு மீதான விசாரணை இம்மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### கொலைச்--

காவலில் வைக்குமாறு சட்டத்தரணி சாலிய பீரிஸ் வாதாடினார்.

படையினர் தொடர்பான வழக்குகளில் சந்தேகத்தின் பேரில் கைதாகும் படையினர் இராணுவ பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்படுகின்றனர் என்பதை உறுதிப்படுத்த யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி நீதிமன்றங்களில் நடைபெற்ற வழக்குகளை எடுத்துக் காட்டி சாலிய பீரிஸ் வாதாடினார்.

இதே நேரம் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். பரமராஜா வாதிடுகையில் இங்கு இடம்பெற்ற சம்பவங்கள், சம்பவம் இடம்பெற்ற விதம், நேரம், காலம், என்பன வேறுபட்டுள்ளன.

எலும்புக் கூடுகளில் சூட்டுக் காயங்கள், நைலோன் கயிறு, தடிகளினால் தாக்கப்பட்ட காயங்களும் இருப்பதினால் இவர்களை இராணுவ பொலிஸ் பாதுகாப்பில் வைக்க வேண்டாம் என்றும் வாதாடியதை அடுத்து சந்தேக நபர்களை இராணுவப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கமுடியாது என்று நீதிமன்ற விளக்க மறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் தற்போதய பாதுகாப்பு சூழ்நிலையில் சந்தேக நபர்களை இங்கு தங்க வைப்பது உசிதமற்றது என படையினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வாதாடியதை அடுத்து இவர்களை நீதிவான் வெலிக்கடை சிறையில் விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

(வ-ச)

## திருட்டு

நல்லூர் கோவில் வீதியில் நேற்று முன்தினம் கடையைப்பூட்டிவிட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்த வர்த்தகர் ஒருவரிடம் இருந்து 5000/-ரூபாய் பணம் சில இளைஞர்களினால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

(வ)

### பிஸ்டல்--

இராணுவத்தில் சரணடைந்தார் எனவும் அக்காலம் தொட்டு இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சைக்கிளில் வந்த ஒருவரே இவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாகவும் இவரது சடலம் மரண விசாரணையின் பின்பு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(சி-108-101-60)

### தேர்தலில்...

யக்கா தெரிவித்துள்ளார்.

தமிழ்ழ விடுதலைப்புலிகளின் அரசியல்பிரிவு தொடர்பாக தயானந்ததிஸநாயக்கா மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு தேர்தல் ஆணையகத்தினால் பத்து ஆண்டுகளுக்குமுன் அதாவது 1990ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்தவிதமான தடைகளையும் அரசு விதிக்கமுடியாது என்று கூறினார். (வ)

### 38 மாதங்களாக..

செய்யப்படவேண்டும் என்ற சட்ட நியதி இருந்த போதும் கடந்த 38 மாதங்களாக தங்கள் இளம் கணவன்மார்களையும், பிள்ளைகளையும் காணாது தவிக்கும் எமக்கு எந்தச் சட்டம் துணைக்கு வரப்போகின்றது.

இவ்வாறு வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத் தலைவர் பி.செல்வராசா தனது உள்ளக்குமுறலை எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எங்கள் பிள்ளைகள் கைது செய்யப்பட்டு முப்பத்தெட்டு மாதங்களாகியும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் இருப்பது நீதியா? என்று உள்ளக்குமுறலுடன் கேட்டார்.

(வ)


**அனுபவமுள்ளவர் தேவை**

கொம்பியூற்றர் ரைப் ஒழுங்கு செய்யும்

**(WORD PROCESSING PAGE MAKER)**

அனுபவமுள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.

''வலம்புரி''
15, வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்

[சி-128]


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இராஜகிரிய குண்டு வெடிப்பு மேலும் இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு இராஜகிரிய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மேலும் இருவர் சந்தேகத்தில் திங்கள் இரவு கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் பந்துலவிக்சிரமசிங்க தகவல் தருகையில்; இச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 12 பேர் ஈடுபட்டிருந்ததாகவும் இதில் 4 பேர் தப்பி ஓடிவிட்டதாகவும் இவர்களைக் கண்டு பிடிப்பதில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதே வேளை பொலிஸாரின் தீவிர தேடுதல் வேட்டையின் போது வாக்கிடோக்கிகளும், ரீ 56 ரகத் துப்பாக்கிகளும் மீட்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(வ)

## இராஜகிரிய குண்டுத் தாக்குதல் விசாரணை, 8 பேர் சாட்சியம்

(கொழும்பு)

கொழும்பு இராஜகிரிய குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான நீதிமன்றவிசாரணை நேற்றும், நேற்று முன்தினமும் கொழும்பு மாவட்ட நீதவான் ஜி.டி. குலதிலகா முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

இவ் விசாரணைகளின் போது எட்டுப் பேர் இதுவரை சாட்சியம் அளித்துள்ளனர்.

அச்சம்பவத்தை நேரில் கண்ட பொலிசார் ஒருவரும் தொடர்மாடியில் வசிக்கும் 5பேர்களும் சாட்சியம் அளித்தவர்களுள் அடங்குவர். விசாரணை இன்றும் தொடரவுள்ளது. (வ)

## மன்னார் வைத்தியசாலையில் இளைஞரின் சடலம் ஒப்படைப்பு

இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் மன்னார் பொலிஸாரினால் மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு ஒப்படைக்கப்பட்ட இச் சடலத்துடன் 20 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டதாகவும் இதுவரை இச் சடலத்தை ஒருவரும் உரிமை கோரவில்லை என்றும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

## அரசு-ஐ.தே. கட்சி இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நாளை நடைபெறும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை நாளை அலரி மாளிகையில் நடைபெற உள்ளது,

கடந்த 9ம் திகதி நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது காணப்பட்ட இணக்கப்படி புதிய அரசியல் யாப்புச் சீர்திருத்த யோசனையின் அடிப்படையில் இப்பேச்சு நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாம் கட்ட பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட பிரதிநிதிகளே இப்பேச்சு வார்த்தையிலும் கலந்து கொள்ள உள்ளனர்.

### எமது----

பறிகொடுத்த பெற்றோர்களும் ஆக்ரோசத்துடன் அழுது புலம்பினர்,

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட கைதிகளில் ஒருவர் கண்ணீரும் கம்பலையுமாக நின்றிருந்த விதவைகளையும் பெற்றோர்களையும் ஏறெடுத்துப்பார்க்காது வெட்கித் தலைகுனிந்து கண்களைத் தனது இருகைகளாலும் மூடியபடி நீதிமன்றத்திற்கு வந்தார்.

ஏனைய கைதிகளும் தங்கள் முகங்களைத் தொங்கப் போட்டவாறு நீதிமன்றம் வந்திருந்தனர்.

கைதிகள் நீதிமன்றம் அழைத்துவரப்படும்போது காணாமல் போனோரின் பெற்றோரும் மனைவிமாரும் அழுதுபுலம்பியதைப் பார்த்து நின்ற பார்வையாளர்களையும் அங்கு கடமையிலிருந்த பொலிஸாரையும் நெஞ்சுருக வைத்தது.

## பொருளியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று பி.ப 3.30 மணிக்கு ''சர்வதேச வர்த்தகம்'' பற்றிய கருத்தரங்கு நடைபெறும்.

பொருளியல் துறை மண்டபத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் பொருளியல் ஆசிரியர் சி. வரதராஜன் கலந்து கொண்டு கருத்துரை வழங் வழங்குவார். (ந)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

எமது சங்கத்தின் ஸ்தாபகர்

**அமரர் பொன். சத்தியமூர்த்தி**

(முன்னாள் பொதுமுகாமையாளர், வடமராட்சி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, நிர்வாக உறுப்பினர்: யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்]

**ஆண்டு ஐந்து ஆனதையா**
**ஆறவில்லை உம் நினைவு**

வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கொத்தணியின் ஊழியர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்